Nov 12, 2012

தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# கட்டுமானத் துறையின் பங்களிப்பால் பெங்களூர் வளர்ச்சி கண்டுள்ளது



பெங்களூர், நவ. 11: கட்டுமானத் துறையின் பங்களிப்பால் பெங்களூர் வளர்ச்சி கண்டுள்ளது என்று, கர்நாடக மாநில துணை முதல்வர் ஆர். அசோக் தெரிவித்தார்.

பெங்களூரில் ஈஸி குழுமத்தினர் சனிக்கிழமை ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அவர், இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியது: சர்வதேச அளவில் தகவல் தொழில்நுட்பத்தில் பெங்களூர் புகழ் பெற்றுள்ளது. அழகிய நகரம், பசுமை நகரம் என்றெல்லாம் பெயர் பெற்றுள்ள இந்த நகரத்துக்கு சிறப்பான தட்ப வெட்பமும் உள்ளது.

அதேபோல், உள்கட்டமைப்பிலும் பெங்களூர் நகரம் சர்வதேச அளவில் பெயர் பெற்றுள்ளது. இதற்கு கட்டுமானத் துறையினரின் பெரும் பங்களிப்பு உள்ளது. அரசின் முதலீட்டாளர் மாநாடு நடத்தியதால், வெளிநாட்டு கட்டுமானத் துறை நிறுவனங்கள் கர்நாடகத்தில் குறிப்பாக பெங்களூரில் கால் பதித்து வருகின்றனர்.

இதனால், பெங்களூர் சர்வதேச அளவிலான கட்டடக் கலைகளைப் பெற உள்ளது. இது நமது நகருக்கு மேலும் பெருமை சேர்க்கும் என்றார் அவர்.

EZZY GROUP